
# காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

9-10-66
விலை 20 காசு




செங்கற்பட்டு மாநாட்டுத்
தலைவரும், திறப்பாளரும்

# வத்தலக்குண்டு மாநாடு

நாட்டு வரலாற்றிலும், கழக வரலாற்றிலும் சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றுள்ள மதுரை மாவட்ட மாநாடு கடந்த 1, 2 தேதிகளில் வத்தலக்குண்டில் நடைபெற்றது. மாநாட்டுக்கு வழக்கறிஞர் திரு. சு. இரத்தினவேல் பாண்டியன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு. து.ப. அழகமுத்து திறந்துவைத்தார்.

வழக்கம்போன்று அல்லாமல், இம்மாநாட்டின் ஊர்வலம், மிகுந்த சிறப்புக்குரியதாய் இருந்தது. அழகுமிகு இருவண்ணக் கொடித் தோரணங்களாலும், சிங்கார வளைவுகளாலும் ஊர் முற்றும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வருங்கால அமைச்சர்களுக்கு வாழ்த்துக்கூறி நின்ற வளைவுகள் பலப்பல. அடக்குமுறை ஆட்சியிடம், தங்கள் தேவைகளைத் தீர்க்கக் கேட்கும் விண்ணப்பத் தட்டிகள் மிகப்பல.


**கண்ணம்மா — தங்கராசு** இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் மாநகராட்சி மன்ற முன்னாள் மேயர் **அப்துல் காதர்** கொடிச் சிறப்பு குறித்து உரையாற்றினார். அவர்தம் உரையின்போது பட்டிதொட்டியெங்கணும் கழகக் கொடியை பறக்கவிட வேண்டியதன் அவசியம் பற்றியும், அது விளக்கும் பயன் குறித்தும் உணர்ச்சி ததும்ப எடுத்துக் காட்டினார்.

**காஞ்சி மணிமொழியார்,** எம்.எல்.ஏ. கலைக்கண் காட்சியைத் திறந்துவைத்து திராவிடர் கழகம் அப்படியே இருந்திருந்தால், பெரியாரிடமிருந்து அண்ணா அவர்கள் பிரிந்து வந்திராவிட்டால், தமிழக அரசியலில் விழிப்புணர்ச்சி தோன்றி இராது; இப்போது 30 சதவீதம் பேராவது அரசியலைப் புரிந்துகொண்டுள்ளார்களே, அந்த அளவுகூட புரிந்துகொண்டிருக்க முடியாது என்று பேசிய பின்னர், மதுரை மாவட்டச் செயலாளர் **முத்து** அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். வீட்டையே காலியாக வைத்துக்கொண்டு, வீட்டுப் பொருளை விற்றுவிடுவோம் என காங்கிரஸ்காரர்கள் நம்மைப் பார்த்துச் சொல்ல என்ன தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று தம் உரையின்போது குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் **இரத்தினவேல் பாண்டியன்** தன் தலைமையுரையில், யானை தன் பலத்தைத் தெரிந்துகொள்ளுமானால், பாகன் அதன் முதுகில் ஏறி அமரமுடியாது; தன்னையே தாக்கும் அங்குசத்தை, துதிக்கையால் தூக்கிப் பாகனிடம் தராது; அதுபோல் மக்கள் தங்கள் பலத்தையும், வாக்குச்சீட்டின் வன்மையையும் உணராமலிருக்கிறார்கள். உணர்ந்துகொண்டுவிட்டால், நம் குறைகள் தானாகக் களையப்பட்டு விடும் என்றார்.

மாநாட்டைத் திறந்து வைத்து **து. ப. அழகமுத்து** பேசுகையில் "திட்டத்தின தொடக்க காலத்தில் 549 லட்சம் டன் உணவு உற்பத்தியாக இருந்தது. இப்போது 890 லட்சம் டன்னாக உயர்வடைந்திருக்கிறது. இது 60 சதவீதத்திற்கு மேல் அதிக உற்பத்தியாகும். ஆனால் மக்கள் தொகையோ ஆண்டுக்கு இரண்டரை சதவீதமே உயர்வடைந்திருக்கிறது. திட்டகால முழுவதும முப்பத்தேழரை விழுக்காடுதான்! இது அரசாங்கக் கணக்கு. உணவுப் பஞ்சத்துக்கு மக்கட் பெருக்கம் என்பது எப்படிக் காரணமாகும் எனக் கேட்டார்.

**செழியன்** எம். பி. பேசுகையில், நாம் உயர்ந்துகொண்டிருக்கிறோம், உயர்வுபற்றியே எண்ணுகிறோம் என்பதன் எடுத்துக்காட்டுகள் தான் உயர உயரமான கம்பங்களை நடுவதும், உயர்வு பற்றிப் பேசுவதுமாகும்; ஆனால் காங்கிரஸ்காரர்கள் குழி பறித்துக்கொண்டு கீழ கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். மாநிலத்துக்கு மாநிலம் ஒருவர்க்கொருவர், தங்களுக்குத் தாங்களே குழி பறித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறி இதுபற்றியதோர் அரிய விளக்கம் தந்தார்.



மாநாட்டுத் தலைவா

1962ல் நாம் நம் தேர்தல் அறிக்கையிலேயே 5 ஏகருக்குக் குறைவான நிலம் படைத்த ஏழை விவசாயிகளுக்கு நிலவரி தள்ளுபடி செய்வதாக அறிவித்தோம். அப்போது கேலியும் கிண்டலும் செய்த காங்கிரசார், இப்போது நிலவரி நீக்க உத்திரவு இடப்போகிறார்களாம்! தேர்தலை முன்னிட்டு இப்படியான வாக்குறுதிகளைத் தந்து மக்களை மயக்க நினைக்கிறார்கள்; இது வெறும் பொய்க்கால் குதிரையேயாகும் என்றார் **என். வி. நடராசன்.**

**நாவலர் நெடுஞ்செழியன்** பேசும்போது, காமராசர் தன் ரஷ்யப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்தபோது தடபுடலான வரவேற்பில், போலீஸ் படையைச் சேர்ந்த குதிரைகளும், படை வீரர்களும் பயன்பட்டிருக்கிறார்கள் எனவும், திரைப்பட வெளியீடுகளில் அவரது மேலைநாட்டுப் பயணம் எந்த அடிப்படையில் காட்டப்படுகிறது என்றும், இது ஜனநாயக முறைக்கு எப்படிப் பொருந்தும் எனவும் கேட்டார்.

வழக்கறிஞர் செ. **மாதவன்** பேசும்போது அரசினர், ஏட்டில்தான் சட்டங்களை இயற்றுகின்றனர் எனவும், அவைகள் ஏழையர்க்குப் பயன்படும்படியாகச் செயல்படுத்துவதில்லை எனவும் கூறி, காங்கிரசாரின் சோஷலிசப் பித்தலாட்டங்கள் பற்றி விளக்கமளித்தார்.

காங்கிரசுக் கட்சி தன்னிடம் இருப்பதனை இழந்துகொண்டிருக்கிறது; கழகமோ இல்லாததனையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கான விளக்கமளித்து **சத்தியவாணிமுத்து** அம்மையார் பேசினார்.

கடலூர் வழக்கறிஞர் **இளம்வழுதி** அன்பு வேண்டுமா? அறம் வேண்டுமா? இன்பம் வேண்டுமா? துன்பம் வேண்டுமா? என்பதுபோல் பலபட அடுக்கிச் சுவைபடக் கூறி, இறுதியாக கழகம் வேண்டுமா? காங்கிரஸ் வேண்டுமா? எனக் கேட்டு அரும் உரையாற்றினார்.

**கலைஞர் கருணாநிதி** பேசுகையில், காங்கிரஸ் தன பலத்தில் தற்போது நம்பிக்கை இழந்துவிட்டது என்றும், அதன் நாடி தளர்ந்து விட்ட

(16ம் பக்கம் பார்க்க)

**சோகமில்லை!**

சுறுசுறுப்புக்கும், பெருமூச்சுக்கும் ஒருபோதும் ஒத்துக் கொள்வதில்லை. இடைவிடாமல், ஏதாவது செய்துகொண்டே இருக்கும் இயல்புடையவர்கள், ஒருநாளும் சோகத்துக்கு இரையாவதில்லை.

—பொவீ


# காஞ்சி

மலர் 3 9—10—66 இதழ் 11


# அறப்போர் வீரர்கள்

பகலிரவு பாராது பாடுபட்டு, வெய்யில் மழை கருதாது உழைத்துழைத்து. இந்திய ஏகாதிபத்தியம் எனும் இந்தி ஏகாதிபத்தியத்தின் குருதி நிறக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த தடியடிபட்டு, செந்நீர் சிந்தி, உயிர் கொடுத்து தியாகத் தழும்பேற்று தீரர்களென கழகத்தோழர்கள் தங்களை மாற்றிக்கொண்டதன் பலனை வெகு விரைவிலே அறுவடை செய்து அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கின்ற இந்நாட்டு ஏழையர்க்கு நல்கி இதமளிக்கத்தக்க முறையில் இடுக்கண் களைந்து இன்புற இருக்கிறார்கள்.

கழகத்தலைவர்கள் அவ்வப்போது ஆற்றும் அரும் உரைகள் மூலமும், இதழ்கள் தரும் கருத்துக்கள் மூலமும் காங்கிரஸ் அரசின் எதேச்சாதிகார வெறித்தனத்தையும், ஜனநாயக சீர்குலைவுகள் பற்றியும் காங்கிரசார் கூறுகிற போலி சோஷலிசம் குறித்தும், ஏட்டுச் சுரைக்காய் அன்ன திட்டங்களைப்பற்றியும் இவற்றால் மக்கள் சமுதாயம் இதுவரை அனுபவித்துவந்த கொடுமைகள் குறித்தும், தமிழகத்தின் பட்டிதொட்டிகள், சிற்றூர் பேரூர், மூலைமுடுக்குகள் எங்கணும் எடுத்துக்கூறி, அறிந்தவற்றை அறியாதோருக்கு அறிவித்து ஆற்றிய பெரும்பணி—

இன்று கழகத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கவே குலைநடுக்கமெடுத்து வார்த்தைகளைக் கொட்டிக்கொட்டிப் பண்பாட்டையே சிதைக்கின்ற அளவுக்கு அழிவின் முகட்டில் நின்று காங்கிரஸ் ஆர்ப்பரிக்கின்ற நிலைக்கு வந்திருக்கிறது.

நடெங்கும் பரவலாக இத்தகு நிலைமை ஏற்பட தோழர்கள் கொடுத்த உயிர் கொஞ்சநஞ்சமல்ல; பட்ட பாடும் குறைவானதல்ல.

உணவுத் துறையிலும் சரி, பொருளாதாரத் துறையிலும் சரி, இந்த அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நெறிப்படுத்த வேண்டிய முறையில் ஆற்றவில்லையென்பதும், அரசுக் கட்டிலேறிய நாள் முதல், தன் ஆதிபத்தியத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்துக்காக மட்டும் பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் என்ற முறையில், ஏழை பணக்காரர் இருசாராரையும் திருப்திப்படுத்துதல் என்பதன்பேரால், இந்திய அரசும் தமிழக அரசும், வழங்கிய வாக்குறுதிகள் ஏராளம் ஏராளம்!

வழங்கப்பட்ட வாக்குறுதிகள், வாடிப்போன மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்க்காததினால், நாடெங்கும், வயிற்றின் தேவைக்குப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்புகின்ற நிலைமை பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

சமூகத்தின் எந்த மட்டத்திலிருப்போராயினும், அவரவர்கள் தத்தம் வாழ்க்கை பெருஞ்சுமையாய் இருத்தல் எண்ணிக் குமுறிக் கிடக்கிறார்கள்.

ஒரு நாட்டின் சுபிட்சத்திற்கும், வளத்திற்குமாக, தீட்டப்படுகின்ற திட்டங்களினாலும், விதிக்கப்படுகின்ற வரிகளினாலும், அந்நாட்டுப் பொருளாதார நிலையில் சிறிது 'திணறல்' ஏற்படுவது தவிர்க்க முடியாதுதான் என்றாலும் அத்திணறல், தனி மனிதனது வாழ்க்கையை எந்தக் கட்டத்திலும் சுமையுடைய தாக்குவதாகவோ, 'சுமை' எனக் கருதிச் சோர்வுறும் நிலை ஏற்படுவதாகவோ இருப்பின் திட்ட முறைகளிலும், வரி முறைகளிலும் தவறு நேர்ந்திருக்கிறது என்பதை அறிவாளர்கள் ஒப்புக்கொண்டும், அவ்வப்போது அதுபற்றி எடுத்துக் காட்டியும் வந்திருக்கிறார்கள்.

நாட்டின் இன்றைய பொதுவான சூழ்நிலையில், ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் மனக்குமுறல் கொஞ்சநஞ்சமல்ல;

மக்களின் இத்தகைய நிலையை ஆளவந்தாருக்கு எப்படி எப்படி எடுத்துரைத்தாலும், அசைக்கமுடியாத பெரும்பான்மை இருக்கிறதென்ற காரணத்தாலேயே காதுகொடுத்துக் கேட்க மறுப்பது மட்டுமல்லாமல், கேலிமொழி உகுத்து ஏசிப் பேசவும்கூட தலைப்பட்டுவிடுகிற நிலைமையையும் காண்கிறோம்.

அரிசியிலிருந்து அடுப்புக்குத்தேவையான விறகு, கிரசின்வரையில் விலையேறிக்கிடப்பதும், பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் அதிகவிலை கொடுத்துக்கூட வெள்ளையாகப் பெறமுடியாத நிலைமை, இந்நாட்டுத் தாய்மார்களது இரத்தக் கண்ணீரை வடிக்கச் செய்வதையும் அறிகிறோம்.

மொத்தத்தில் நாட்டின் வாழ்க்கைச் சூழல் நலிந்து மெலிந்துகிடப்பதும், சுமையாகி இருப்பதும், வருங்காலத்தில் வாழ்க்கை என்பதுபற்றிய ஒரு அஞ்சத்தக்கநிலை உருவாகிவிடும் என்பதை நாடு ஒருமுகமாக உணர்ந்திருக்கிறது.

இந்நிலையில் வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரசே மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கத்தக்க சூழ்நிலை வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும், அதே நம்பிக்கையில் தோழர்கள் வாளாயிருந்துவிடக்கூடாது.

ஆற்றவேண்டிய பெருங்கடமைகளும், பொது மக்களது உணர்வுகளை நமதாக்கிக்கொள்ளச் செய்ய வேண்டிய சேவைகளும், இதுவரை ஆற்றியது குறைவு—இனிதான் அதிகம் என்ற எண்ணத்தோடு கருமமே கண்ணாயிருக்க வேண்டிய வேளை அணுகிவிட்டது.

இதுவரையில் கழகம் ஆறு மாநாடுகளை நடத்தி முடித்துவிட்டது. கழக மாநாடுகளிலே தரப்படுகின்ற கருத்துவிளக்கங்கள் பட்டிதொட்டிகளிலே பரப்பப்படுகின்ற முறையினாலும், தன்மையினாலுமே ஆளவந்தார் புரிகின்ற அநீதிகளை அவதியில் ஆழ்ந்துகிடக்கும் பொதுமக்கள் புரிந்துகொள்ள முடிந்தவர்கள் ஆவார்கள்.

**"சென்னையில் மாற்றரசு காணவேண்டிய முக்கிய மூன்று தகுதிகளையும், அதாவது — பொருளாதார முற்போக்கு, ஜனநாயக உணர்வு, தேசியத் தன்மை ஆகியவைகளை தமிழகத்தில் தி. மு. கழகம் கொண்டிருக்கிறது!"**

—என்று ச. சோ. தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா, இதுவரையில் கழகத் தோழர்கள் ஆற்றிய பெரும் பணிக்கு நற்சான்று அளித்து அண்மையில் பேசியிருக்கிறார், வடபுலத்தில்!

இதே நேரத்தில், அதே கட்சியைச் சேர்ந்த எஸ். எம். ஜோஷி,

**"அடுத்த தேர்தலில் காங்கிரசுக் கட்சி பதவிக்கு வந்தால் நாட்டில் அராஜகம் ஏற்படும்; அதனால் ஏற்படக்கூடிய நிலைமைகளை பின்னர்; காங்கிரசினாலேயே கட்டுப்படுத்த முடியாமற் போய்விடும்."**

—என்று காங்கிரசாட்சிக்கு நற்சான்று வழங்குகிறார்.

தமிழகத்தைப் பொருத்தமட்டில் காங்கிரசல்லாத பிற பெரிய கட்சித் தலைவர்களின் கண்களில் சுடர் விடும் கழகத்தைப்பற்றிய கருத்துக்கும் கண்ணோட்டத்திற்கும் தோழர்களின் அயராப் பணியே காரணம் என்பது கைக்கரி.

ஏழாவது மாநாடாக இக்கிழமை, செங்கை மாவட்ட மாநாடு செங்கற்பட்டில் நடக்கிறது.

செங்கை மாவட்டத்துச் சிறப்பு, இனி எழுதித்தான் தெரிவிக்க வேண்டிய நிலைக்குட்பட்டதல்ல; தமிழகத்தின் வரலாற்றில், பண்டைநாள் பல்லவ ஆட்சியில் தமிழகம் ஒளிமிக்க நிலை பெற்றுள்ளது என்பதனை வரலாறுகள் கூறிக் காட்டும்.

மாமல்லபுரத்து எழில் கலைக்கோபுரங்கள் அதற்கான சான்று கூறுவன. இம்மாவட்ட மெங்கணுமே இத்தகு கலைக் கோவில்கள் பரந்து விரிந்து பாருக்குத் தென்னகத்தின் கலைச்சிறப்பை பக் காலங்காலந்தொட்டும் பரப்பிக்கொண்டே இருக்கும்.

இவ்வளவு பீடுக்கும் பெருமைக்கும் உரிய செங்கை மாநாட்டில்— கலந்துகொண்டிருக்கும் தோழர்களின் கடமையில்தான்— அங்கே தரப்பட்டுள்ள விளக்கங்களை யெல்லாம் வீடு வீடாகச் சென்று பரப்பும் முறையில்தான், வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

கழகத்தின் வெற்றி என்பது, தமிழகத்தில் வாழும் அத்தனைக் குடிமக்களது வெற்றி என்பதாகும் பசி, பஞ்சம், பட்டினி என்பதற்கான விடுதலையாகும்!

இவ்விடுதலைப் போரில், தோழர்கள் அனைவரும் ஒன்றி நின்று, ஒருமித்தக் கருத்தோடு செயல்பட வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறோம். அறப் போர்வீரர்கள் அணி திரண்டது என்று நாடு வியந்து பாராட்டும் விதமாக செங்கை மாநாடு திகழ்ந்திட, "தோழர்களே! வந்திடுவீர்! என்ற அன்பழைப்பு பெற்ற அருமைத் தோழர்கள் கூடிடும் காட்சி, உள்ளத்துக்கு ஓர் உன்னதமான எழுச்சி யூட்டிடுமன்றோ!

❀


நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும் உலோகங்கள், அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்கள் சேர்த்து உருவாக்கிய

டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளையின்

# சித்தர் நவலோக கல்பம்

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

5, ஜெனரல் சாமிநாய்க்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. தொலைபேசி: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கு

பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்,

பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் மாமண்டூரிலும்

டாக்டர் சாது ப. நாராயணசாமி பிள்ளை அவர்களைக் கலந்து குணம் பெறலாம்.

# தம்பி

"நானோ என் மனைவியோ ஒரு குற்றமும் செய்யாதபோது என் தாயாருக்குக் கோபம் வருகிறது.

நானோ என் தாயாரோ ஒரு தவறும் செய்யாதபோது என் மனைவிக்குக் கோபம் வருகிறது.

என் தாயாரோ மனைவியோ ஒரு பிழையும் செய்யாதபோதும் எனக்குக் கோபம் வருகிறது.

இது யாருடைய குற்றம் அரசே!"

இப்படி ஒரு கேள்வியைப் புலவர் கேட்டபோது, மன்னன் திகைத்துப்போயிருப்பான் என்றுதானே எண்ணிக்கொள்வாய்,

ஐயம் அகற்றுக! என்று புவியாளும் மன்னன் புலவரிடம் கேட்பது இயல்பு. இஃதோ அஃதன்று, புலவர் கேட்கிறார் விடை தரும்படி, மன்னனை நோக்கி.

நிதி மட்டும் படைத்தவனாக இல்லை அம்மன்னன்; நிரம்ப மதிபடைத்தவன். கேள்விக்கான விடை புரிந்துவிட்டது. பணியாளை அழைத்து, புலவருக்குத் தேவைப்படும் பணம் கொடுத்தனுப்பக் கட்டளையிட்டான்.

## போஜராஜனும்! காமராஜரும்!

மன்னனுடைய மதிநுட்பத்தைக் கண்ட புலவர் பெரிதும் பாராட்டினார்.


காரணமற்ற கோபம்! ஒவ்வொருவருக்கும்! ஒருவர்மீது ஒருவருக்கு—புலவர் அந்த நிலையைத்தான் எடுத்துரைத்தார்.

வறுமை நோய் வாட்டும்போது மட்டுமே இந்த நிலைமை இருக்க முடியும்- கோபம்- ஒருவர்மீது ஒருவருக்கு. தன் குடும்பத்தை வறுமை வாட்டி வதைக்கிறது என்பதைத்தான் புலவர் எடுத்துரைத்தார் என்பதனை உணர்ந்துகொண்ட மன்னன், பரிசுப் பணம் கொடுத்து புலவரின் வறுமையை நீக்குவதன் மூலம் அவர் குடும்பத்தில் குதூகலம் மலர்ந்திடச் செய்தான்.

போஜராஜனுடைய அறிவுத் தெளிவையும், அவர் புலவர்களை ஆதரித்த பண்பினையும் விளக்கிட இந்தக் கதையினைக் கூறுவர்; ஆனால் தம்பி! நான் இதனை எடுத்துக்காட்டுவது அதற்காக அல்ல; வறுமை என்னென்ன செய்துவிடும், எவரெவருக்குக் கோபம் எழ வைத்துவிடும் என்பதை விளக்க.

புலவர், கற்றறிவாளர், காரணமற்று கோபம்கொள்ளக் கூடாது என்பதனை நன்கு அறிவார்; ஆயினும் புலவரே சொல்லுகிறார்; ஒரு குற்றமும் செய்யாத என் மீது என் தாயாருக்கும் மனைவிக்கும் கோபம் வருகிறது. என் தாயாரும் மனைவியும் ஒரு பிழையும் செய்யாதிருக்கும்போதே எனக்கு அவர்கள் மீது கோபம் வருகிறது—என்பதனை.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க அறிவாற்றல் பெற்ற புலவருக்கே வறுமை, இந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்றால், பாட்டாளிகளையும் ஏழை எளியோரையும் நடுத்தர வகுப்பினரையும் வறுமை என்னென்ன எண்ணிட வைத்திடும், என்னென்ன செய்திட வைத்திடும் என்பதனை விரிவாகவா விளக்கிட வேண்டும்.



# விம்மும் ஏழையர் விழித்துக்கொண்டால்...

அதிலும் தம்பி! கடினமாக உழைத்திடும் உத்தமன், வாழ முடியாமல் தவித்திடும்போது, அவன் மனம் என்ன பாடுபடும்!

தன்னை உருக்குலையச் செய்திடும் விதமான உழைப்பு, தனக்கு வாழ்வு அளிக்காமல், வேறு எவரெவரோ பளபளப்புப் பெற்றிடவே பயன்படுகிறது என்பதை உணரும்போது அவன் உள்ளம் எரிமலையாகாமலிருக்க முடியுமா?

அந்த எரிமலை வெடித்து ஆத்திரக் குழம்பு குபுகுபுவெனக் கிளம்பி வரும்போது, அதனைத் தடுத்திட தணியச் செய்திட எத்தனை நல்லுரைகள் தந்திடினும் என்ன பயன்?

பொறுத்துக்கொள்! பொழுது புலரும்!!—என்று கூறி எத்தனைக் காலத்துக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்க முடியும்?

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற போதனை செய்து எத்தனைக் காலத்துக்கு அவனை இல்லாமை கொட்டுமிடத்தில் அடைத்து வைக்க முடியும்?

அவனைச் சுற்றிலும் சுகபோகிகள், களியாட்டம்! அவன் உள்ளத்தில்மட்டும் குமுறல்! எத்தனைக்காலம் அவன் சகித்துக்கொள்வான்?

அன்றலர்ந்த மலரின் கவர்ச்சி, அந்தி வானத்தின் அழகு, ஓவியத்தின் நேர்த்தி, மணிமாடத்தின் எழில் ஆகியவைபற்றி மகிழ்ச்சியுடன், கண்டவர் பேசிக் கொண்டிருப்பதை, எப்படி விழி இழந்த ஒருவன் கேட்டுக்கொண்டிருக்க முடியும்! ஏழையின் நிலையும் அதுபோன்றதே.

அவன் கொதிப்படைகிருன்; குமுறுகிருன்; வெறுப்புணர்ச்சி கொள்கிருன்; தன்னை இந்த நிலையில் தள்ளி வைத்துவிட்டு, உல்லாசபுரியினர் உண்டு களித்துக் கிடந்திடும் கொடுமையினை அழித்தொழித்தாகவேண்டும் என்று ஆவேசம் கொள்கிருன்.

அவனுடைய கண்கள் பலகாலம் புனலைக் கொட்டிக் கொட்டி இறுதியில் வரண்டு போகின்றன; அவைகள் பிறகு கனல் கக்கத் தொடங்குகின்றன! அப்போது அவனைப் பார்த்து, ஆத்திரம் ஆகாது! வெறுப்புணர்ச்சி பெருந்தீது! இதனை ஆண்டவன் பொறுத்துக்கொள்ளமாட்டார் என்றெல்லாம் எவரேனும் பேசிட முற்படின், அவன் ஓர் ஏளனச் சிரிப்பொலி கிளப்பிடுவான்; அந்த ஓசை எந்த பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிவிடத்தக்கதாகி விடும்.

## நீங்கள் சோம்பேறிகளாம்!

....ரஷ்யாவிலும் தொடக்கத்தில் சில சிக்கல்களும் பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்தன; அவற்றைத் தைரியமாக அவர்கள் சமாளித்தார்கள். நம்மிடம் உள்ள சோம்பேறித்தனம் அவர்களிடம் இல்லை!!

--காமராஜர் (இந்திய-ரஷ்ய கலாசார கழகத்தில்)

ஏர் பிடிப்பவன்தானே! ஏனோ தானோதானே! இடுப்பொடிந்தவன்தானே! என்று அவனைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தவர்களின் கண்களில் அச்சம் கப்பிக்கொள்ளும் வடிவம் கொண்டிடும் நிலை பெறுவான். சாவுக்கு அஞ்சாத நிலையினனாகிவிடுவான்! எதனையும் அழித்திடும் வல்லமை பெறுவான். விம்மிக் கிடந்த ஏழை, விழித்துக்கொண்டான் என்பது அதன் பொருள். சிட்டுகள் வல்லூறை எதிர்த்திடும் காலம் என்று கவிஞர் இக்பால் இதனைத்தான் குறிப்பிடுகிருர்.

விம்மிக் கிடந்திடும் ஏழை விழித்துக்கொள்ளும் நிலைபெறும்போது, அவனிடம் இதமாகப் பேசியும், அவனுக்காகப் பரிவு காட்டியும், அவனைக் காத்திடும் உறுதி தெரிவித்தும், அவனை அந்தக் கதிக்கு ஆளாக்கிய செல்வவான்கள்மீது சீற்றத்தைக் கொட்டுவது போலக் காட்டியும், நிலைமை மோசமாகிடாமல் தடுத்திட முனைபவர் சிலர் உண்டு.

**காமராஜர், தம்மை அந்தப் பணிக்கு ஒப்படைத்து விட்டார்!**

ஏழைபங்காளர் என்றும், எளியோருக்காக வாதாடுபவர் என்றும், அவருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பணக்காரர்களின் ஆதிக்கத்தை அவர் அடக்கிடுவார், ஒடுக்கிடுவார் என்று பேசப்படுகிறது.

அவரேகூட, ஏழையைக் காத்திடவேண்டும் என்ற ஆர்வமும், உறுதியும் கொண்டவராக இருக்கக்கூடும்.

போலி நாடகம் ஆடுகிருர் என்றுகூடக் கூறத் தேவையில்லை.

உள்ளபடி ஏழைகளை ஈடேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே இருக்கிருர் என்றே வைத்துக் கொள்வோம்.

ஆனல் அவரால் அதனைச் சாதிக்க முடியாது.

ஆற்றலற்றவர் என்று கூறவில்லை, கொள்கை நாணயமற்றவர் என்றும் கூறவில்லை; அவர் உள்ள இடம், தனக்கென ஏற்படுத்திக்கொண்ட சூழ்நிலை, அவருடைய வல்லமையைச் சொல்லளவு ஆக்கிவிடுகிறது.

அவர் எவ்வளவு ஆர்வத்தை வரவழைத்துக்கொண்டு பேசினலும், சீமான்கள் அதுபற்றித் துளியும் அஞ்சாமலும், கவலைப்படாமலும் இருப்பதற்குக் காரணம், பணக்காரர் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட அவரால் முடியாது என்ற உணர்வுதான்; நம்பிக்கைதான்.

**பணக்காரர்களை நடுக்கூடத்தில் உட்காரவைத்துக்கொண்டு அவர் சோஷியலிசம் பேசுவது, நுனிமரத்தில் இருந்துகொண்டு அடிமரத்தை வெட்ட முனைவது போன்றதாகும்.**

இதனை இங்குள்ள செல்வவான்கள மட்டுமின்றி, வெளிநாட்டுச் சீமான்கள் குறிப்பாக அமெரிக்க நாட்டு கோடீஸ்வரர்கள் மிக நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிருர்கள். ஆகவேதான் அவர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம பற்றி அவர்கள் துளியும் பொருட்படுத்தவில்லை.

# தத்துவம் பிறந்தது இன்று? நேற்று?

ஏழைகளை மயக்க மட்டுமே அவருடைய ஜனநாயக சோஷியலிசப் பிரசாரம் பயன்படும் என்பதை சீமான்கள் மிக நன்றாக உணர்ந்துகொண்டுள்ளனர்.

அதனால்தான் கோடீஸ்வரரான பிர்லா, மறுபடியும் காங்கிரஸ் கட்சிதான் நாடாளவேண்டும் என்ற தமது விருப்பத்தை ஒளிவு மறைவு இல்லாமல் சில திங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

ஏழையின் மனம் எரிமலை ஆகி, புரட்சித் தீ கிளம்பிடாது தடுத்திட வேண்டுமானால், அந்த ஏழை, தனக்காக வாதாடவும் போராடவும், தன் நிலையைச் செம்மைப்படுத்தவும் பணியாற்றிட ஒருவர் இருக்கிறார், அவர் ஆற்றல் மிக்கவர், அஞ்சா நெஞ்சினர் என்ற நம்பிக்கையைப் பெறவேண்டும்.

இன்று காமராஜர் மூலம் அந்த நம்பிக்கை ஊட்டப்படும் முயற்சி நடைபெற்று வருகிறது.

சமூக அமைப்பும் பொருளாதார முறையும் புரட்சிகரமாக மாறுதிருக்கச் செய்திட, இப்படி ஒருவர் தேவைப்படுகிறார்.

ஆகவே, செல்வவான்களே இன்றையத் தினம், காமராஜரின் செல்வாக்கை வலிவுள்ளதாக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையிலேயே காமராஜரால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலை இருந்திடின், சீமான்கள் காமராஜரை கவிழ்த்திட முனைவர், உச்சி மோந்து முத்தமிட மாட்டார்கள்.

**ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராஜர், தங்குவது மாளிகையில் குலவுவது சீமான்களுடன்!**

அவர்களுடன் குலவிக்கொண்டே அவர்களின் கொட்டத்தை அடக்க முடியாதா என்று கேட்பரேல், தம்பி! முடியாது என்று கூறிட, 'மாமேதை' தேவையில்லை.

அதுமட்டுமல்லாமல், ஒரு சில பணக்காரர்கள் பீதிகொண்டுவிடப்போகிறார்கள் என்ற கவலையுடன் அவர் வெளிப்படையாகவே, தாம் பேசும் சோஷியலிசத்தில் பணக்காரர்கள் இருக்கலாம், 'பணம் திரட்டலாம், ஆனால் அவர்கள் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக இருக்கவேண்டும் என்று அறிவித்துவிட்டார்.

இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல! பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே உலவிக்கொண்டிருக்கிறது.

சீமான் ஆடம்பரமாக உடுத்திக்கொண்டிருக்கிறானே என்று எண்ணி அருவருப்பு அடையாதே! நர்த்திமிக்க நெசவாளர்களின் வாழ்க்கை உயருவதற்காகவே அவர் விலையுயர்ந்த வேலைப்பாடுமிக்க ஆடைகளை உடுத்திக்கொள்கிறார்.

கோட்டைபோன்ற மாளிகையில் கொலுவிருக்கிறாரே என்றெண்ணிக் கொதிப்படையாதே! கட்டடக் கலைஞர்கள் புகழ்பெற்றிடட்டும் என்ற நோக்கத்தால் தான் மாடமாளிகை கட்டினார்; தன் சுகபோகத்துக்கு அல்ல!—என்று தத்துவம் பேசப்பட்டது.

இவைகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் மதிப்பு இருந்தது! இன்று? இவைகளை ஏற்பார் இல்லை.

காலமும் கருத்தும் மாறிவிட்டிருப்பதை அறியாததால் காமராஜர், இந்த தர்மகர்த்தா தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறார்.

தர்மகர்த்தா வேலை பார்ப்பதே ஒரு புண்ணிய காரியம் என்றும்,

தர்மகர்த்தாவைத் தட்டிக் கேட்பதே பாபகாரியம் என்றும்,

தர்மகர்த்தாவின் பொறுப்பிலேயே சொத்து இருக்கவேண்டும், அதுதான் முறை என்றும் நம்பப்பட்டு வந்தகாலம் அல்ல இது.

அத்தகைய நம்பிக்கை இருந்துவந்த நாட்களிலேயேகூட, தர்மகர்த்தாக்களாக இருந்துவந்தவர்கள், நெறி தவறி நடந்துகொண்டனர், சுயநலக்காரராயினர் என்ற குற்றச்சாட்டுகள் பலமாக உலவின. அந்தநிலை இன்று மேலும் எந்த அளவுக்கு ஆகிவிட்டிருக்கும் என்று கூறத் தேவையில்லை.

செல்வவானாக ஒருவன் இருப்பதுஅவன் செய்த புண்ணியத்தால் என்றும், ஏழையாக ஒருவன் நெளிவது அவன் செய்த பாபத்தால் என்றும் நம்பப்பட்டு வந்தது. முன்பு. இன்று அந்தவிதமான பேச்சு ஏளனம் செய்யப்படும் கட்டம் பிறந்துவிட்டிருக்கிறது.

ஆனால் காமராஜர் மூலம் அந்தப் பத்தாம்பசலி நம்பிக்கையை மீண்டும் புகுத்திடலாம் என்று அரசியலில் இடம்பெற்றுக் கொண்டுள்ள செல்வவான்கள் எண்ணுகின்றனர்.

நெறி தவறுதவராக ஒரு தர்மகர்த்தா இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்; அத்தகையவர் என்ன செய்திடுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்?

உள்ள சொத்து தன் சுகபோகத்துக்கு என்று கருதிவிடாமல், பொது நன்மைக்கு,

## முக்கிய அறிவிப்பு

இக்கிழமை 8, 9, சனி, ஞாயிறு இரு நாட்களும் செங்கற்பட்டில் நடைபெற விருந்த செங்கை மாவட்ட மாநாடு, இடைவிடாத மழையின் காரணமாக அடுத்த கிழமை 15, 16-தேதிகளில் நடைபெறும் என்பதை கழகத் தோழர்களுக்கும், வாசகர்களுக்கும் அறிவித்துக்கொள்கிறோம்.

# சீமானின் பெருநிதிக்குக் கதைபல காணரோ

அதிலும் குறிப்பாக ஏழை எளியோர்களின் நன்மைக்காகச் செலவிடப்படவேண்டும், அதற்காகவே அந்தச் செல்வம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கருத வேண்டும்.

அந்தக் கருத்தின் அடிப்படையில், ஏழைக்கு இதம் செய்யத்தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

அன்னதானம், சத்திரம் சாவடி கட்டுதல், பண உதவி தருவது போன்றவைகளை மேற்கொள்ளவேண்டும்.

வானமே கூரையாய், விண்மீன்களே விளக்காய், தரையேபஞ்சணையாகக்கொண்டு தத்தளிக்கும் தரித்திரவானுக்கு வீடுகட்டித் தரவேண்டும்.

அவன் பிழைக்க வழியின்றி வேதனைப் படும்போது, காப்பாற்றுவதற்காக பண உதவி செய்திடவேண்டும்.

ஐயோ பாவம்! அவனும் மனிதன்! அவன் வதைபடப் பார்த்திடப் போமா! என்று எண்ணி, ஏழையின் வேதனையைத் துடைத்திட, தன்னிடம் உள்ள செல்வத்தைத் தந்துதவவேண்டும்.

இருளும் அழுக்கும் நிரம்பிய இடத்திலே ஏழையை இடர்ப்படவிடாமல், அவன் வாழ்வுக்கு ஒளியும் நறுமணமும் கிடைத்திடச் செய்திடவேண்டும்.

தன்னிடம் உள்ள பணத்தைக்கொண்டு, தன் மூன்றடுக்கு மாடியை நான்கு அடுக்கு உள்ளதாக மாற்றிக் கொள்ளாமல், இருட்குகை போலுள்ள இடத்திலிருந்து ஏழையை விடுவித்து அவனுக்கு இல்லம் அமைத்துத் தரச் செலவிடவேண்டும்.

தன்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு, செயற்கைக் குளம் அமைத்து அதிலே பன்னீரைத் தேக்கி வைத்து, அதிலே நீந்திவிளையாடி மகிழ்ந்திட முனையாமல், அந்தப் பணத்தைக்கொண்டு, ஏழைக்குப் போதுமான குடி தண்ணீர் கிடைத்திட ஊருணி அமைத்தளிக்க வேண்டும்

உள்ள பணத்தைக்கொண்டு தனக்கொரு மணிமுடி தயாரித்துக்கொள்ள முனையாமல், ஏழையின் பிணி போக்க அப்பணத்தைச் செலவிடவேண்டும்.

தம்பி! யோசித்துப் பார்த்தால் இப்படிப் பல செய்திடலாம் என்பது புரியும்.

செல்வவான்கள் இவ்விதமாகவா தமது செல்வத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்திடின், நம்மைக் கவலை கப்பிக்கொள்ளும். ஆனால் நான் உன்னை அது பற்றிக்கூட ஆராய்ந்திடச் சொல்லவில்லை. நான் கூறுவது வேறு; ஒரு அடிப்படைப் பிரச்சினை.

**தர்மகர்த்தா, நெறி தவறாது நடந்திடினும், சமூக அமைப்பு மாறாது**

ஒருவர் தர்மகர்த்தாவாக இருக்கும் நிலை எதைக் காட்டும் என்றால், அவர்போன்ற ஒருவருடைய தரும சிந்தனையை எதிர் பார்த்துப் பலர் ஏழைகளாக இருந்தாக வேண்டும் என்பதனை.

ஏழ்மை இருந்து தீரவேண்டும்; அப்போதுதான் ஏழை பங்காளர் என்று ஒருவர் திகழ்ந்திட முடியும் ஆக, தர்மகர்த்தா முறை என்பது, ஏழை என்றும் பணக்காரர் என்றும் சமூகம் இரு பிரிவாக இருப்பதையும் அதனால் விளைந்திடும் வேதனையையும் மாற்றிவிடாது! சொல்லப் போனால் அந்த முறை இருந்து தீரும்.

இதனைப் பல நூற்றாண்டுகள் பார்த்தான பிறகுதான் சிந்தனையாளர்கள், தானம்—தருமம்—என்பவைகள் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அடியோடு போக்கிடா என்பதை அறிந்தனர்; அவனிக்கு எடுத்துரைத்தனர்,

**ஏழை என்று ஒரு பிரிவும் பணக்காரர் என்றோர் பிரிவும் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த நிலை ஒழிந்திட வழி செய்தாக வேண்டும் என்று தெரிவித்தனர்.**

**அதன் விளைவாக மனித குலத்துக்குக் கிடைத்த கருத்துக் கருவூலமே சோஷியலிசம் என்ற தத்துவம்.**

தர்மகர்த்தா முறை பரீட்சிக்கப்பட்டு அது போதுமானதாக இல்லை என்பது மெய்ப்பிக்கப்பட்ட காரணமாகவே, புதிய முறை வகுக்கப்பட்டது.

அந்தப் புதியமுறையே சமதர்மம்—சோஷியலிசம்.

இந்தப் புதியமுறையை எப்படி நடத்திச் செல்வது என்பதைச் சிந்தித்துச் செயலாற்றவேண்டிய காலம் இது. ஆனால், இந்தக் காலத்தில், மக்களை பின்னோக்கித் துரத்தும் விதமாக, 'தர்மகர்த்தா' முறைபற்றிப் பேச முற்படுகிறார், காமராஜர்.

இன்று பிரபுக்கள் பலரிடம் சேர்ந்துள்ள சொத்திலே பெரும் பகுதி, ஒரு காலத்தில் தரும காரியத்துக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மெள்ள மெள்ள அந்தச் சொத்தினை அவர்கள் தங்கள் சுக போகக் கருவியாக்கிக் கொண்டனர் என்பதனை பொது மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

கோயிலுக்காக, வேத பாடசாலைக்காக, அன்ன தானத்துக்காக, அனாதைகளின் பராமரிப்புக்காக என்று குறிப்பிடப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பெருநிதி, பிறகு சீமான்களின் சொந்தச் சொத்து ஆகிவிட்ட கதை பலப் பல.

**இன்றைய சீமான்களிலே பலர், நேற்றைய தருமகர்த்தாக்கள்!**

இப்படி தோற்றுப் போய்விட்ட ஒரு தத்துவத்தை, புதை குழியிலிருந்து வெளியே எடுத்து வைத்துக்

# நிரம்பிய நெஞ்சுரமா, ஏய்த்திடும்திறமையா

கொண்டு, தமது புதிய கண்டுபிடிப்பு இது என்று பேசிப் பார்க்கிருர் காங்கிரஸ் தலைவர்.

சிலர் செல்வத்தைக் குவித்துக் கொள்வதற்கான ஏற்பாட்டினை வைத்துக்கொண்டு, பலர் பஞ்சைகளாகித் தவித்திடும் நிலையையும் வைத்துக்கொண்டு, இல்லாதாரின் இன்னலை உடையவர் துடைத்திடுவார் என்று உபதேசம் பேசி வருவது, கண்ணைப் பறித்துவிட்டு, கைக்கோல் தருவதற்கு ஒப்பானதாகும்; பாம்புப் புற்றுக்குப் பக்கத்தில் பச்சிலைச் செடி நட்டுவைத்துக் காட்டுவது போன்றதாகும்; கூரையைக் கொளுத்திவிட்டு, குடம் குடமாகத் தண்ணீர் தர முனைவது போன்றதாகும்.

இது பிரச்சினையைத் தீர்த்திடும் முறை அல்ல; மூடி மறைக்கும் முயற்சி.

ஆகவேதான் தம்பி! நாம் இந்த தர்மகர்த்தா முறை பற்றிய பேச்சினை ஏற்க மறுக்கிருேம்.

மேலும், தம்பி! இந்தப் போதனையை இவருக்கு முன்னலே எப்படிப்பட்டவர்களெல்லாம் செய்து பார்த்து பலன் காணுது வாடிப் போயினர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது, கவலை அதிகமாகித்தான் தீரும்.

மகாத்மா காந்தியார் தமது ஆயுட்காலம் முழுவதும் இந்த போதனையைத்தான் செய்துவந்தார்!

ரஷிய நாட்டு தத்துவ மேதை டால்ஸ்டாய் வேதாந்த வித்தகர் இந்தப் போதனை நடத்தியவர்—அறிவோமே.

அவர்களின் உபதேசங்கள் 'பூஜை மாட' ஏடுகளாக்கப் பட்டு விட்டனவேயன்றி, புதிய முறையையா, சமூகத்திலே புகுத்தின? இல்லையே!

மகாத்மாவின் உபதேசம் சாதித்துக் கொடுக்காத தர்மகர்த்தா முறையையா, புதிய பெரியவரின் பேச்சு தந்திடப் போகிறது? அப்படிச் சொல்லிட ஒன்று நெஞ்சழுத்தம் நிரம்பவேண்டும், அல்லது ஏய்க்கும் திறமை மிகுந்திருக்க வேண்டும்.

தருமகர்த்தா முறை செயல்பட்ட காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களும் சாவடிகளும் ஏராளம். ஆனல் வளர்ந்துவிட்ட ஏழையின் தொகையோ அதனினும் ஏராளம்.

தருமகர்த்தாக்களாகச் சிலர் விளங்கிட வேண்டுமென்ருல், அவர்களிடம் பெருநிதி சேர்ந்திட வேண்டும்; அவர்களிடம் பெருநிதி சேர்ந்திட வேண்டுமென்ருல், நாட்டிலே உற்பத்தியாகிற செல்வத்திலே பெரும்பகுதி அவர்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்; பெரும்பகுதி செல்வம் செல்வர் சிலரிடம் சேர்ந்திடுமானல், சமூகத்தில் பெரும் பகுதி வரண்டுதானே கிடந்தாக வேண்டும்.

இதனுல்தான், தம்பி! ஏழை பணக்காரன் பேதம் நீடித்துக்கொண்டு வருகிறது. இதனுல்தான் தம்பி! வறுமையால் தாக்குண்டோர் தொகை வளர்ந்தபடி இருக்கிறது. இதனுல்தான் தம்பி! வறுமையின் தாக்குதல், குடும்பங்களிலே குமுறலை, காரணமற்ற கோபம் கொண்டிடும் நிலையினை மூட்டிவைக்கிறது. இதனை உணர்ந்தோர், உயர் பதவியினர் தர்மகர்த்தா தத்துவம் பற்றிப் பேசுவதைக் கேட்கும்போதே, எள்ளி நகையாடத்தான் செய்வர்.

தருமகர்த்தா தத்துவத்தைப்பற்றிக் காமராஜர், பேசி, அதுகேட்டு செல்வவான்கள் மனம் உருகி, ஐயகோ! நாம் சுகபோகத்தில் இருக்கிருேம், நமது உடன்பிறந்தோர் வறுமையிலே உழல்கிருர்களே! நாம் கனிச்சாறு பருகுகிருேம், அவர்கள் கால்வயிற்றுக் கூழும் கிடைக்காமல் தவிக்கிருர்களே! நமக்குப் பஞ்சணை, அவர்களுக்குக் கட்டாந்தரை! நாம் மாளிகையில், அவர்கள் மரத்தடியில்! நாம் புதுப்புது இன்பம் தேடிப் பெறுகிருேம், அவர்கள் புழுப்போலத் துடிக்கிருர்களே! இது சரியா, முறையா? மக்களில் பெரும் பகுதியினர் வேதனையில் உழலும்போது, நாம் வாழ்க்கையையே விழாவாக்கி மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடப்பதா! மனிதாபிமானமாகுமா இது! சேச்சே! என்ன கொடுமை! என்ன கொடுமை! இரும்புப் பெட்டியிலே பணம், ஏழை, குடிசையில் பிணமாகிருன், பசி நோயால்! எதற்கு அந்தப்பணம்? என்னிடம் உள்ள பணம்? என்னிடம் உள்ள பணம் என் பணமா? ஏழையின் வியர்வை அல்லவா பணமாகமாறி என்னிடம் வந்தது? அந்த ஏழைகளைக் காத்திட இந்தப் பணம் பயன்படட்டும் என்றல்லவா இத்தனைப் பணம் என்னிடம் ஒப்

## முத்தம்மா சிந்தனை!

வாழையடி வாழையாக
வந்துவிட்டோம் ஏழையாக!
கூழையடி கஞ்சையடி
குடிச்சிவந்தோம் கோழையாக!

ஓட்டெல்லாம் போட்டோமே
ஓடுமுன்னுன் தேனுறு!
ஓட்டெல்லாம் வாங்கிக்கிட்டு
ஓடாக்கிப் போட்டானே!

அம்மா!

ஏமாத்து வித்தையடி!
எண்ணகல்லு சாமியடி!
சீமானின் வாழ்க்கையடி
செழிச்சுக் கெடக்குதடி!

நெஞ்ச தெறந்து வச்சா,
நேரா நின்னு கேட்டு வச்சா,
பஞ்சா பறக்க வச்சா,
பாதகத்தை வேட்டு வச்சா,

பொன்னு வெளையுமடி! அக்கா
போன தெல்லாம் திரும்புமடி!
சொன்னலும் கேக்காட்டா
சோதனைதான்! வேதனைதான்!!

— பருத்தியூர் பாலன்.

# கூப்பிய கரங்கள் தாக்கிட எழுமே!

படைக்கப்பட்டது? குளத்திலே நீரைத் தேக்கிவைப்பது எதற்கு? ஊரார் பருகிட உதவவேண்டும் என்பதற்கல்லவா? முதலைகள் புரண்டிவா தடாகம்!! நான் தனவான்! கனவான்! சீமான்! பொருள் என்ன? தனவன் என்பது தருமவான் என்பதன் மறுபெயரல்லவா? கனவான் என்றால் மக்களைக் கவனிப்பான் என்றல்லவா பொருள்? சீமான் என்றால் சீர்செய்வோன் என்றல்லவா பொருள்! இதுதானே தருமகர்த்தா முறை! இதனை இதுநாள்வரை மறந்துகிடந்தேனே! மக்கள் துரோகியாகிக்கிடந்தேனே! இப்போதல்லவா உண்மையை உணர்ந்தேன்! கண்திறந்தது! இதயம் மலர்ந்தது! எல்லாம் பெரியவர் காமராஜர் தந்த தரும கர்த்தா உபதேசம் கேட்டதனால். இதோ, இனி என் செல்வம், ஏழைக்கு இதம் அளிக்க! என் கடன் பணி செய்துகிடப்பதே! யான் பெற்ற செல்வம் யாவர்க்கும் சொந்தம்! தந்தேன்! தந்தேன்! நான் தரும கர்த்தா! தரும கர்த்தா! — என்றெல்லாம் நெஞ்சு நெக்குருகக் கூறி, தம்மிடம் உள்ள செல்வத்தை அள்ளித்தந்து ஏழையின் அல்லலைப் போக்கிடவா கிளம்புகின்றனர்? இல்லையே! ஒரு புன்னகையைஉதிர்க்கின்றனர்; புதுத்தெம்பு கொள்கின்றனர்!

மதியற்றோரே! கேட்டீரா காமராஜர் பேச்சை! பணக்காரர்கள் என்றாலே பாதகர்கள் என்று பேசிவந்தீரே! சீமான் என்றால் ஏழைக்கு வைரி என்று ஏசி வந்தீரே! முதலாளி என்றால் பாட்டாளிக்குப்பகையாளிஎன்று பழிசுமத்திவந்தீர்களே! காமராஜர் பேச்சைக் கேட்டீர்களா? நாங்கள் தர்ம கர்த்தாக்கள்! ஆமாம்! தர்ம கர்த்தாக்கள்! எம்மிடம், எமது தகுதி திறமை, பண்பு பார்த்து, செல்வம்வந்து குவிந்திருக்கிறது. இந்தப் பணம் எமக்கேவா சொந்தம்? இந்தப் பணத்தைக்கொண்டு நாங்களா சுகபோகத்தில் மூழ்கிடப் போகிறோம். நீரைத் தன்னிடத்தில் நிரப்பி வைத்துக்கொண்டிருக்கும் குளம் எப்படி ஊராருக்குப் பயன் தருகிறதோ அப்படி ஏழைகளுக்கு இதம் செய்திட இந்தச் செல்வம்? எம்மிடம் பணம் இருக்கிறதே என்பதற்காக, பகைத்துக்கொள்ளலாமா? உங்கள் நலனுக்காக அல்லவா இந்தப்பணம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! நாங்கள் தந்திட! நீங்கள் பெற்றிட! நாங்கள் தந்திட வேண்டுமானால், எம்மிடம் பணம சேர்ந்திட வேண்டுமல்லவா? அப்படிச் சேர்ந்திடும்போது, அடிக்கிறான் கொள்ளை, குவிக்கிறான் கோடி என்று கொக்கரிக்கிறீர்களே, நியாயமா? நாங்கள் குவித்திடாவிட்டால், உங்களுக்கு உதவி யார் செய்திடுவர்? எப்படிச் செய்திட முடியும்'! தரும கர்த்தா இல்லாவிட்டால் தருமம் எப்படி நடக்கும்? தருமம் நடக்காவிட்டால், தரித்திரத்தால் தவித்திடும் உங்கள் வேதனை எப்படிப்போகும்? ஆகவே இனியாகிலும், அருவருப்பு பொறாமை, பகை கொள்ளாதீர்கள்! மாளிகையில் மந்தகாசமாக வாழ்கிறான் என்று கோபம் கொள்ளாதீர்! மாளிகை வாசியினால்தானே மண் குடிசைக்காரரின் இன்னலைத் துடைக்க முடியும் உங்கள் இன்னலைத் துடைக்கத்தானே எம்மிடம் இலட்சங்கள் உள்ளன! நாங்கள் தர்மகர்த்தாக்கள்! எங்களை வாழவிடுங்கள், வளரவிடுங்கள்!! வாழ்த்துங்கள்! வணங்குங்கள்! உமக்கு வாழ்வளிக்கும் வல்லமையாளர் நாங்கள்!! என்று ஏழையைப்பார்த்துக் கூறிடும் துணிவு பெறுகின்றனர்.

சுயநலக்காரன்
சுரண்டல்காரன்
சுகபோகி
பணம்பெருத்தான்
இரும்புப் பெட்டிக்காரன்

என்றெல்லாம் பணக்காரர்கள் கண்டிக்கப்பட்டால், ஒரு கொதிப்பு எழும்; குமுறிக் கிடந்தவர்கள் சீறி எழுவர்; கூப்பிய கரங்கள் தாக்கிட எழும்; புனல் சொரிந்த கண்கள் கனல் கக்கும், புரட்சி மூளும், நமது நிலை அழியும். ஆனால் நாம் தர்மகர்த்தாக்கள் என்று காமராஜரே கூறிவிட்டார், ஆகவே ஏழை எளியோர் நம்மை வாழ்த்துவர், வணங்குவர்; நமக்கு எதிர்ப்பு எழாது, பகை மூண்டிடாது, நமது ஆதிபத்தியம் அழிந்துபடாது!! — என்று எண்ணுகின்றனர். அந்த எண்ணம் ஒரு துணிவைத் தருகின்றது.

காமராஜரின் தர்மகர்த்தாப் பேச்சு எதிர்காலத்தைப்பற்றி எண்ணி எண்ணி அஞ்சிக்கிடந்த பணக்காரர்களுக்குப் புதுத் தெம்பும், துணிவும் தந்துவிட்டது.

முதலாளித்துவ முறைக்கு இருந்து வரும் எதிர்ப்பு முறிந்திட வழி செய்கிறது.

ஏழையைச் சீமானிடம் பணிந்திடச் செய்கிறது.

தம்பி! இவைகளை அறிந்து, திட்டமிட்டு காமராஜர் இந்த தர்மகர்த்தா முறைபற்றிப் பேசுகிறார் என்று


## வாய்வு சூரணம்
**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்புவாய்வு—இடுப்பு, கைகால் பிடிப்பு மூட்டுகள் வலி —அசரிக்கை—செரியாமை—வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

**160 கிராம் டின் ரூ 3—50**

தேவைக்கு எழுதவும்:

**S. V. R. கண்டர் சன்ஸ்,**
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்-9.

கிடைக்குமிடங்கள்:

**தேஜ்பால் & கோ.,**
91, நைனியப்பநாய்க்கன் தெருவு,
சென்னை-3.

**இளங்கோ கிளினிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5.

**சொக்கலிங்கம் செட்டியார்,**
நாட்டு மருந்துக்கடை
திருப்பாபுலியூர், கடலூர் N. T.

**ராஜா மெடிகல் ஹால்**
31, தர்மராஜா கோவில் தெரு,
பெங்களூர்.1 (கண்ட்)

**E. வல்லாராம்நாடார் & சன்ஸ்**
188-A. தாராவி ரோடு,
பம்பாய்-17.

**ஆத்மஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி, (சிலோன்)

**ஸ்ரீ கணபதி அண் கம்பெனி**
66, பெல்பீல்டு ஸ்டிரீட்,
ஈப்போ P.O. (மலேசியா)

# எடுக்கின்ற விழாக்கள் எதனுல் தெரியுமோ?

நான் கூறவில்லை. விளைவு தெரியாமல், தமது பேச்சு எதற்குப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்பதை உணர்ந்தறியாமல், தித்திப்புப் பேச்சுப் பேசிவைப்போம், ஏழையின் உள்ளக்குமுறல் குறையட்டும் என்ற எண்ணத்தில் பேசுகிருர். தம்மீது வீசப்பட்டு வந்த பகைச் சொற்களும், எறியப்பட்ட எதிர்ப்புகளும் மாறி, மதிப்புமிக்க ஒரு பட்டப் பெயர்—தர்ம கர்த்தா—என்ற பெயரல்லவா கிடைக்கிறது, இந்தப் பெருமையை நமக்கு அளித்தவர் காமராஜர் அல்லவா? அவரல்லவா நமக்கு உண்மை நண்பர்! அவர் வாழ்க! அவர் கூறிடும் தர்மகர்த்தா தத்துவம் வாழ்க! — என்று வாழ்த்துகின்றனர். 'சோடசோபசாரம்' செய்யவும் சொர்ணபிஷேகம் செய்யவும் முனைகின்றனர்! திருடர்களுக்கு நடுநிசி உழைப்பாளர் என்று சிறப்புப் பெயர் கொடுத்திடுவார் உண்டா? இல்லையல்லவா? அப்படி யாரேனும் துணிந்து கூறிடின், கூறுபவர் பெருந்தலைவர் வரிசையினராகவுமிருப்பின், 'நடுநிசி உழைப்பாளிகள்' திருவிழா அல்லவா கொண்டாடுவர்!

> காமராஜர் நடத்தும் ஜனநாயக சோஷியலிச விழாவில், சீமான்கள் மகிழ்ச்சியுடன் கலந்துகொள்வதன் காரணம் தமக்கு, மதிப்புமிக்க ஒரு பட்டத்தை—தருமகர்த்தா என்ற பட்டத்தைச் சூட்டினுரே நம்மை எதிர்த்திடுவோரை அழைத்து ஏமாளிகளே! இவர்களை யாரென்று எண்ணிக்கொண்டு எரிச்சல் கொள்ளுகிறீர்கள்? இவர்கள் தர்மகர்த்தாக்கள்! என்று கூறுவதன் மூலம், நமக்கு ஒரு எதிர்காலத்தை உறுதிப்படுத்தியிருக்கிருரே! இவருக்கல்லவா விழா எடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

ஆனுல் அவர்களும் உண்மையைக் கண்டறிய முனையவில்லை. இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் சாஸ்திரமாக காப்பியமாக, கதையாக கவிதையாக, எப்படிப்பட்ட மாமேதைகளால் முன்பு தரப்பட்டது! எவ்வளவு சடுதியில், எளிதாக ஏழை மக்கள் அதனை மறந்துவிட்டார்கள்! முன்பு தத்துவம் பேசியவர்கள், இன்றைய காமராஜரைக் காட்டிலும், பெரியவர்களல்லவா? அவர்களில் அருளாளர்கள் இருந்தனர், கவிவாணர்கள் இருந்தனர்; புலமை மிக்கோர் இருந்தனர்; புவி எங்கும் உள்ள நிலைமைகளைத் தெரிந்த அறிவாளர்கள் இருந்தனரே! அவர்கள் அன்று பேசினர் தருமகர்த்தா முறை பற்றி. பேசி? கேட்டனர், தலை அசைத்தனர்! ஆனுல், மீண்டும் மீண்டுமல்லவா அறம் அழிந்துபட்டது, செல்வச் செருக்கு கொக்கரித்துக் கூத்தாடிற்று.

அகவலாகவும் வெண்பாவாகவும் அறுசீராகவும் பிறவகையினதாகவும், உரைநடையாகவும் உரையாடலாகவும், பேரறிவாளர்கள் எடுத்துக் கூறிவந்த தர்மகர்த்தா முறையினை—மிக எளிதான முறையில்,

> அறம் செய விரும்பு

என்று நம் ஆன்ருேர் சொல்லிவைக்கவில்லையா! அதனை திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பதால் விளையப்போகும் பலன் என்ன?

செல்வவான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற பேச்சு, சமூகப் புரட்சி ஏற்படுத்தத் துணிவற்றவர்கள் நடத்திக் காட்டும் கண்ணுமூச்சி விளையாட்டு!

செல்வவான்களை தர்மகர்த்தாக்கள் என்று நாடாளும் பெரியவர்கள் கூறுவதைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தை கெட்டிப் படுத்திக் கொள்வர்.

> இன்று காங்கிரசின் துணைகொண்டு முதலாளிகள் அந்தக் காரியத்தைத்தான் நடத்திக் கொண்டுள்ளனர்.

பணம் சிலரிடம் குவிந்திருக்கும்போது அதனை தருமகர்த்தா முறை என்று பேசி, பூசி மெழுகுகிருர்கள். ஏராளமான நிலபுலன்களை தமதாக்கிக் கொண்டிருந்த ஜெமீன்தாரர்களை ஒழித்தபோது இந்த தர்மகர்த்தா தத்துவம் எங்கே போய்விட்டிருந்தது?

ஐநூற்றுச் சொச்சம் சமஸ்தானதிபதிகளின் பட்டத்தைத் தட்டிவிட்டபோது, இந்த தர்மகர்த்தா தத்துவம் ஏன் பதுங்கிக் கொண்டது?

> செல்வவான்கள், தர்மவான்கள் என்றுல் ராஜாக்களும் ஜெமீன்தாரர்களும், கடவுளின் பிரதிபிம்பங்கள் அல்லவா!! ஒப்புக் கொள்வார்களா?

பணக்காரர்கள் ஏழைகளுக்காகவே சொத்தைப் பயன் படுத்தும் தர்மகர்த்தாக்களாக உள்ளனர் என்ற தத்துவம், அரசன் ஆண்டவனின் பிரதிநிதி, மகாவிஷ்ணுவின் அவதாரம் என்ற தத்துவத்தோடு சேர்ந்துபிறந்ததாயிற்றே; அரசன் ஆண்டவனின் பிரதிநிதி என்ற தத்துவம் தகர்க்கப்பட்டுப் போனதுபோலவே, சீமான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற தத்துவமும் தூளாகிப் போகாமல் தப்பித்துக்கொள்ளமுடியுமா!

> ஆனுல் பலிக்கிறவரையில் பார்க்கலாம் என்ற முறையில் காமராஜர் இந்த தருமகர்த்தா முறைபற்றிப் பேசிவரலாம் என்று இருக்கிருர். இந்த தத்துவத்தில் முன்பு மக்களுக்கு இருந்துவந்த மயக்கம் இன்று பெருமளவு போய்விட்டிருக்கிறது. ஆகவே அவர்கள், காமராஜர், தருமகர்த்தா தத்துவம்பற்

## காங்கிரஸ் சோஷலிசம்!

### அமெரிக்க மதிப்பீடு!!

"சோஷலிசம் பற்றி உறுதி தெரிவிப்பதும், பாங்கிகளைத் தேசியமயமாக்குவது பற்றிப் பேசுவதும், நகர வருமானங்களுக்கு உச்ச வரம்பு கட்டுவதாகக் கூறுவதும், காங்கிரசு மேடைக்குப் புதிய பேச்சுக்களல்ல; இவைகளெல்லாம், 'செயலளவில் கடைப்பிடிக்கப்படும்' என்பதற்கும் அறிகுறிகள் கிடையாது!

"தேர்தல் வரையிலாவது எதையாவது சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்திரா காந்தியும், காங்கிரசு இடதுசாரிகளுடன் சேர்ந்துகொண்டுள்ளார்."

--'வாஷிங்டன் ஈவினிங் ஸ்டார்'

(என்னும் நாளிதழில்)

# வாழ்வுக்கு வழிகேட்டால் வகையற்ற பேச்சு

றிப் பேசிடக்கேட்டு கேலிப்புன்னகை செய்கின்றனர்.

பணக்கார ஆதிக்கத்தை ஏன் இன்னமும் விட்டுவைக்கிறீர்கள் என்று மக்கள் சீற்றத்துடன் கேட்கும் போது, அவர்களை சாந்தப்படுத்த காமராஜர்கள் இந்த தருமகர்த்தா தத்துவத்தைப் பேசிடலாம்.

பணக்காரர்களிடம் ஏழைகள் பகை உணர்ச்சிக் காட்டும்போது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள பணக்காரர், இந்த தருமகர்த்தா தத்துவத்தைப் பயன்படுத்திட முனையலாம்.

ஆனால், இதே தருமகர்த்தா தத்துவத்தை எடுத்துக்காட்டி ஏழை, பணக்காரனை அவனிடம் உள்ள செல்வத்தை ஏழைக்கு இதம் செய்திடச் செலவிடும்படிக் கேட்க முடியுமா? கேட்டிடின், பணக்காரர்கள் தருமகர்த்தா தத்துவத்தின்படி நடந்துகொள்ள முன் வருவார்களா? வரமாட்டார்கள்! சீறுவர்! கொதித் தெழுவர்.

> தருமகர்த்தா என்ற பட்டத்தை, தனவான் கனவான், சீமான்! என்ற பழைய பட்டங்களுடன் சேர்த்து இணைத்துக் கொள்ள மட்டுமே பணக்காரர்கள் இசைவார்கள். அந்த தத்துவத்தின்படி, தன் சொத்து தனது சுகபோகத்துக்கு அல்ல, ஏழையின் நன்மைக்கு என்று கருதிச் செலவிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

காமராஜர் பேசிடும் தருமகர்த்தா தத்துவத்தை நம்பிக் கொண்டு ஏழையர், செல்வர்களை அணுகி, ஐயன்மீர்! உலவிடும் மாளிகையும் அதிலுள்ள பெருநிதியும், வயலும் வனமும் அணிஉணவும் பெறுவனவும், உம்முடையதன்று; எமக்காக உம்மிடம் ஒப்படைத்த செல்வமேயாகும்; நீவிர் எமக்காக இறைவனால் தருமகர்த்தா ஆக்கப்பட்டவர். எனவே, எடும் செல்வத்தை, கொடும் ஏழையர் துயர் போக்க என்று கேட்டிடின், என்ன கிடைத்திடும்?

தடியடி
சிறை
துப்பாக்கிச் சூடு!

'கேட்பதும் கிடைப்பதும்' என்ற தலைப்புடன், சிங்கைத் தோழர் உலகநாதன் என்பார் தந்துள்ள கவிதையின் பகுதி, செல்வவானின் போக்கை நன்கு எடுத்துக் காட்டுகிறது என்பதனால் அதனைத் தருகிறேன்.

"வாழ்வில்லை வளமில்லை
வலிவில்லை செழிப்பில்லை
சூழ்தொல்லை சிறிதில்லை
சுகமில்லை நலமில்லை" என்றால்
மரமுண்டு கயிறுண்டு
மரணத்தில் சுகமுண்டு
பிறகென்ன துயருண்டு?
பேசாதே போவென்று சொல்வார்—இவர்
கூசாமல் சாவென்று சொல்வார்—இங்கே
வாழ்வுக்கு வழி கேட்டால்
சாவுக்கு வழி காட்டிச் செல்வார்!

அவர்கள் கிடக்கட்டும் தம்பி! இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லையே அம்மா! என்று உழவன் ஒருவன் கூறுவதாக நான் 'ஓரிரவு' என்ற கதையில் எடுத்துக் காட்டினேன், ஆண்டு பலவற்றுக்கு முன்பு. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். ஆனால் காமராஜருமா அப்படி இருக்கவேண்டும்.

**வாழ்வுக்கு வழி கேட்டால், வகையற்ற பேச்சை தத்துவமாக்கியா தருவது!**

இதென்ன புதிதா? மிக மிகப் பழையது! பலன் தருவதா? இல்லை! உபதேசக் குவியலுடன் சேர்த்துவைக்கத்தக்கது! அதைத்தான் தரமுடிகிறது அவரால்! அதற்கு மட்டுமே அவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

தம்பி! துவக்கத்தில் காட்டினேனே புலவர் கேள்வி, அதனை மறுபடியும் படித்துப் பார்!

ஒருவர்மீது ஒருவருக்குக் காரணமற்றுக் கோபம் வருகிறது அரசே! அதற்கு என்ன காரணம்? என்றல்லவா புலவர் கேட்டார். அதற்கு இதயம் படைத்த மன்னன் என்ன பதில் அளித்தான்? நிலைமையை உணர்ந்து, பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையைப் போக்கினான்.

போஜராஜன் காலத்தில் காமராஜர் இருந்திருந்து, போஜராஜனிடம் போய் நிற்காமல் அந்தப் புலவர் காமராஜரிடம் போய்க் கேட்டிருந்தால், பதில் என்ன கிடைத்திருக்கும்? கோபமா! உமக்கும் வருகிறது, உம் மனைவிக்கும் வருகிறது, உமது தாயாருக்கும் வருகிறதா! காரணமற்றுக் கோபம் வருகிறதா! சரி! சரி! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்று என்னைக் கேட்கிறீர்கள். சரி! சரி! கூறுகிறேன் கேள் ஐயா புலவரே! ஆறுவது சினம்!!—என்ற இந்தப் பதிலைத் தானே தந்திருப்பார்!!

அண்ணன்

அண்ணாதுரை

## எண்ணங்களே காரணம்!

எந்த ஒன்றும் தன்னிலேயே உயர்வையும் தாழ்வையும், நியாயத்தையும் அநியாயத்தையும், இன்பத்தையும் துன்பத்தையும், நன்மையையும்தீமையையும்அடக்கிஇருக்கவில்லை. உணவுக்கு உப்பு சுவையூட்டுவதுபோல, ஒவ்வொன்றிற்கும் நம் எண்ணங்களே (மேற்சொன்ன) பண்புகளைக் கொடுக்கின்றன.

---அனடோல் பிரான்ஸ்.



# பாண்டியன் திருமேனி

கே.ஜி. இராதாமணாளன்

## 2—19

## முயலுக்கு மூன்றே கால்

படிகளின் வழியே ஆணவச்சிரிப்போடு இறங்கி வந்த தூமகேது, சிறைக்கம்பிகளுக்கு அருகே வந்து நின்று, "சோலையப்பா, சௌக்கியமாக இருந்தாயா?" என்று கேட்டான்.

அவன் கையிலிருந்த எழுத்தாணியையும், ஓலைச் சுருளையும் பார்த்தபடியே, 'ஆமாம்!' என்று வெறுப்போடு சோலையப்பன் பதிலளித்தான்.

"நான் ஊரிலில்லாதபோது உனக்கு நடைபெற வேண்டிய உபசாரங்களில் ஏதாவது குறை இருந்ததா?"

"ஒன்றுமில்லை!"

தூமகேது கையிலிருந்த எழுத்தாணியால், சிறைக் கம்பிகளைத் தட்டினான் 'டங்! டங்!' என்ற அந்தச் சப்தத்திற்கிடையே அவன் பேசத் தொடங்கினான்.

"ஒரு குறையும் உனக்கு ஏற்படவில்லை என்பதை அறிய நான் ரொம்பவும் சந்தோஷம் அடைகிறேன்!"

டிங் டிங் என்ற சப்தம் நின்றது. சோலையப்பனின் முகத்தை சில நொடிகள் மௌனமாக உற்றுப் பார்த்துவிட்டு, தூமகேது திரும்பவும் பேச்சைத் தொடர்ந்தான்:

"சோலையப்பா, உண்மையை நான் சொன்னால் நீ நம்புகிறாயோ இல்லையோ! உன்னை இந்த நிலையில் பார்க்கும்போதெல்லாம் என் மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா? நீ யார் — உன் அந்தஸ்து என்ன — எத்தகைய பதவியில் இருக்கவேண்டியவன் நீ—இவற்றை நினைத்தால் எவ்வளவு வேதனை உண்டாகிறது தெரியுமா? ராஜபோகத்தில் இருக்க வேண்டியவன்; யாரோ நாடோடிகளின் பேச்சையெல்லாம் கேட்டு, இப்படித் தொல்லைகள் அடைய வேண்டும்? உன் நிலையைப்போலவே இந்த நாட்டின் நிலையும் எங்களைக் கவலையடையச் செய்கிறது! எந்தப் பாண்டிய நாடு உனது தந்தை ஆளவந்தாரின் தோள் வலிமையினால், சிறப்புற்றதோ, அந்த பாண்டிய நாடு இன்று சீரழிந்துவிடுமோ என்று அஞ்சத்தக்க ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறது. இந்தப் பாண்டிய நாட்டை இத்தகைய நெருக்கடியான நிலையில் கண்டால் உனது தந்தையின் தோள்கள் எப்படித் துடிதுடித்திருக்கும்? அவரது போர்வாள், எதிரிகளின் இரத்தத்தில் மூழ்கியெழ எவ்வாறு பதை பதைத்திருக்கும்! படைத்தலைவரை இந்தப் பாண்டியநாட்டின் துரதிர்ஷ்டம், அவர் உயிரைக் குடித்து ஏப்பமிட்டுவிட்டது! ஆளவந்தார் உயிரோடு இருக்கிறார் என்றால், அந்தப் பராக்கிரம பாகுவிற்குத்தான் அவ்வளவு துணிவு பிறந்திருக்குமா, இலங்கையை விட்டுத் தமிழ் நிலத்தில் அடியெடுத்துவைக்க? எல்லாம் துரதிர்ஷ்டம்! நாட்டின் நலத்திற்காக உழைக்கவேண்டிய நல்ல வாலிபப் பருவத்திலிருக்கும் நீ ஏன் — இப்படித் துன்பத்திலும் சிறையிலும் தத்தளிக்கப் போகிறாய்? சோலையப்பா! இந்தப் பாண்டியநாட்டைக் காப்பாற்ற வேண்டும், அதன் புகழை வளர்த்து எட்டுத் திசையிலும் பரவச்செய்யவேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் உன்னைப் போன்ற வாலிபர்களுக்குத்தானே இருக்க வேண்டும் என்னைப் போன்ற வயோதிகர்களுக்கும் வீணர் கொட்டம் அடங்காதவர்களுக்கும் இருந்து என்னபயன்? அனுபவத்தால் சில நல்ல யோசனைகள் சொல்லவும் அமைதிக்குவேண்டிய உபதேசங்கள் செய்யவும் முடியுமே அன்றி— உருவிய வாளோடு நின்று ஊரைக் காக்கவா முடியும், என்னைப் போன்றவர்களால்! சோலையப்பா இதையெல்லாம் எதற்குச் சொல்லுகிறேன் தெரியுமா, உன்னை அந்த நாசகாரர்கள் கூட்டத்திலிருந்து விடுவித்து, நாட்டுப் பணியில் ஈடுபடச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தினால்தான் கூறுகிறேன்! நான் கேட்பவற்றுக்கு மட்டும் ஒளிவு மறைவு இல்லாமல் பதில் சொல்லிவிடு—அதன் பிறகு பார், உன்னை எவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருகிறேன் என்று!"

தூமகேது தன் பேச்சை நிறுத்திவிட்டு சோலையப்பனின் முகத்தைப் பார்த்தபடி, கம்பியை எழுத்தாணியால் தட்டினான். டிங்! டிங்!

"உபதேசம் முடிந்து விட்டதா, இன்னும் ஏதாவதிலும் மிச்ச மீதமிருக்கிறதா?" என்று அலட்சியத்தோடு கேட்டபடி, குனிந்திருந்த தலையை நிமிர்த்தினான் சோலையப்பன்.

"ஆத்திரம் இன்னும் தணியவில்லை போலிருக்கிறதே?"

"எப்படித் தணியும்? அக்கிரமத்தைக் கண்டு ஆத்திரங் கொள்வது, என் பிறவிக் குணம்! நீர், வஞ்சகர் கூட்டத்தின் முடிசூடா மன்னர்! கயவர்களின் காவலர்! சுயநலக்காரரின் தலைவர்' சூழ்ச்சிக் கும்பலின் சூத்திரதாரி! அப்படிப்பட்ட உம்மைக் கண்டா, உம் பேச்சைக் கேட்டா, நான் அகங் குளிர்ந்து விடுவேன்?"

"பழித்துப் பேசுகிறாய் சோலையப்பா-பரவாயில்லை, நான் கோபித்துக்கொள்ளமாட்டேன்! கண்ணப்பன் கற்களைக் கொண்டுதான், லிங்கத்தை அர்ச்சித்தான்! கல்லடி பட்டதினால் சிவனார் ஆத்திரமடைந்தாரா-இல்லையே! ஆனந்தமடைந்து அந்த அடியாருக்குக் காட்சி தந்து கடாட்சித்தார் அல்லவா? மன்மதனோ கரும்பு வில்லை வளைத்து மலர் அம்புதான் தொடுத்தான்! அந்தப் பூபாணம் பட்டால் உடலில் வலியா கண்டுவிடும்? ஆனாலும் கைலாயபதி பூபாணம் எறிந்த மன்மதனை ஏன் சுட்டுப் பொசுக்கினார்? யார் செய்வது எதுவாக இருந்தாலும் அவர்கள் செய்தது என்ன என்பது அல்ல முக்கியம்—அவர்கள் எந்த நோக்கத்தோடு அதைச் செய்தார்கள் என்பதைக் கவனிக்க வேண்டியதே முக்கியம்! கண்ணப்

பன் கல்லைத்தான் எறிந்தான் எம்பிரான் மீது — இப்பொழுது நீ கோபச் சொற்களை என்மீது வீசுவதைப் போல" என்று பேச்சை நிறுத்திவிட்டு எழுத்தாணியைத் தட்டினான். டிங்! டிங்!

அந்தச் சப்தம் சோலையப்பனின் மனத்தில் ஏதோ ஒருவித எரிச்சலை உண்டாக்கிற்று! சில சமயங்களில் அந்த எழுத்தாணியின் அடி, தன் மண்டையில் விழுவதைப்போலக் கூட, அவனுக்குத் தோன்றியது.

டிங்! டிங்! டிங்!

"என்னை ஏமாற்றிவிட முடியும் என்ற நினைப்பில் எதையாவது தித்திப்பாகச் சொல்லிக்கொண்டே இருக்காதீர்—அது வீண் வேலை! எத்தர்களின் பேச்சைக் கேட்டு, உண்மை என்று நம்பி, உள்ளம் பூரித்துப் போக நானென்றும் ஏமாளி அல்லன். என்ன கேட்கவந்தீரோ, அதை மட்டும் கேளுங்கள்!' என்று எரிச்சலோடு சொல்லிக்கொண்டே, எழுத்தாணியை வெறுப்போடு பார்த்தான்.

டிங்! டிங்!

"என்னிடம் எதையும் மறைக்காதே, சோலையப்பா! உண்மையை ஒத்துக் கொள்! அதனால் உனக்கு எந்தத் தீங்கும் நேரிடாது—உறுதியாக நான் சொல்கிறேன்!"

"உங்கள் அபயம் எனக்கு வேண்டாம்!"

"பெரியவர்கள் சொல்லை அலட்சியப்படுத்தாதே, சோலையப்பா!"

"யார் பெரியவர்கள், யார் சிறியவர்கள் என்பதை நீங்கள் சொல்லி, நான் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை! பார் பார் நான் எவ்வளவு பெரியது என்று யானை, தன் பெருமையைத் தானே தப்பட்டை யடித்துச் சொல்வது கிடையாது!

"அதிகப் பிரசங்கியாகாதே!"

"நான் ஆகவில்லை — அதிகமாக நீளும் தங்களது பேச்சு, என்னை அப்படியாக்குகிறது! இப்பொழுது தங்களுக்கு என்ன வேண்டும்?"

"அந்தக் குகையிலிருந்த ஓலைகள் பொன்னையாவினுடையதுதானே?" என்று கேட்டுவிட்டு, எழுத்தாணியைத் தட்டினான். டிங்! டிங்!

"பராக்கிரம பாண்டியன் மீது நல்லாமணிக் கவிராயர் செய்த காவியம் அதுவென்று, பல முறைகள் நான் சொல்லிவிட்டேன்!"

"தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று இன்னமும் சொல்கிறாய்!"

"இல்லை! பார்த்தது முல்லை, அது வெள்ளை நிறம் என்று நான் சொல்கிறேன்! இல்லை, பார்த்தது எருக்கன், அது கருப்புநிறம் என்று என்னைச் சொல்லவும் ஒப்புக்கொள்ளவும் செய்ய அரும்பாடுபடுகிறீர்."

"பொன்னையாவின் மத எதிர்ப்புப் போராட்டத்தில் தாங்களும் கலந்துகொள்வதற்காக — அதற்கான ஆதரவுகள் தருவதாக—பலர் எழுதிய ஓலைதாம் அவை, என்பதையும் நான் அறிவேன்!"

"தாங்கள் நினைப்பதும் சொல்வதும் உண்மையல்ல!"

"நான் சொல்வதல்ல — நீயே இதைச் சொல்லியிருக்கிறாய், ஆடலழகி செந்தாமரையிடம்! உள்ளத்தில் அடைத்துவைத்திருக்கும் இரகசியங்களை எல்லாம், சிலர் தூக்கத்தில் வாய் பிதற்றி விடுவார்களே —அதைப் போல காதல் மயக்கத்தில் அந்த உண்மையை நீ கொட்டிவிட்டிருக்கிறாய்!"

"பொய்! அவள்மீது நான் காதல் கொண்டேன் என்பதும் அந்த வெறியில் உளறிவிட்டேன் என்று சொல்வதும் சுத்தப் பொய்!"

"உண்மையை நீ ஒத்துக்கொண்டால் உன் வாழ்வை வளமாக்க என்னால் ஆனதைச் செய்கிறேன்! என்னை நீ நம்பவேண்டும்!" என்று அன்பு நிறைந்த குரலில் தூமகேது சொல்லிவிட்டு, இரும்புக் கம்பிகளின் மீது எழுத்தாணியைத் தட்டினான்.

டிங்! டிங்! அந்தச் சப்தம் ஏகாந்தமான அச்சிறையில் பயங்கரமாக எதிரொலித்தது. கைதிகளின் மனத்தைக் குழப்பவும், பொய்களைக் கற்பனை செய்ய முடியாதபடி சிந்தனையை வெட்டி விடவும் கூடிய சக்தி அந்தச் சப்தத்திற்கு இருக்கிறதென்பது தூமகேது அனுபவத்தில் கண்ட உண்மையாகும்! ஆகவே கைதிகளை விசாரிக்கும்போது, ஏதாவது சப்தத்தை விட்டு விட்டுச் செய்துகொண்டே இருப்பான்!

அந்த எழுத்தாணி உண்டாக்கிய சப்தம், சோலையப்பனுக்கு அதிகமான எரிச்சலை உண்டாக்கிற்று. ஏதாவது யோசிப்பான் — அந்த யோசனையைத் துண்டித்து நிறுத்திவிடும், 'டிங்! டிங்!' சப்தம்!

காரணத்தோடுதான் தூமகேது அப்படிச் செய்கிறான் என்பதை அறியான். அறியான் என்பதுமட்டுமல்ல, அந்தச் சந்தேகங்கூட அவனுக்குக் கிடையாது! அப்படி ஒரு சந்தேகம் அவன் மனத்தில் எழுந்திருந்தால் மறுநொடியே அந்த எழுத்தாணியைப் பிடுங்கி அறையின் ஒரு மூலையில் வீசியெறிந்துவிட்டிருப்பான்.

டிங்! டிங்!

"ஒப்பற்ற படைத்தலைவரான ஆளவந்தாரின் மகன் இராஜத் துரோகம் செய்தான் என்றால் மக்கள் எவ்வளவு வெறுப்படைவர்கள்! வேண்டாம் சோலையப்பா, உனக்கு அந்தக் கெட்டபெயர்! நான் சொல்வதைக் கேள்! உண்மையை ஒத்துக்கொண்டு, இதில் ஒரு கையெழுத்திடு! நாளைய உனக்கு விடுதலை!" என்று கூறிக்கொண்டே, கையில் வைத்திருந்த ஓலைச் சுருளைச் சோலையப்பனிடம் கொடுத்தான்.

சுருளாக இருந்த அந்த ஓலையைப் பிரித்துச் சோலையப்பன் படித்துப் பார்த்தான்:

"பசுமலைக் குகையில் பொன்னையா மறைத்து வைத்திருந்த ஓலைகளை, நான் சுட்டுப் பொசுக்கிவிட்டேன். பொன்னையாவின் நண்பர்களும்—அவன் திட்டத்தை நிறைவேற்றுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டவர்களும் — எழுதிய ஓலைகளாகும் அவை. அந்த இராஜத் துரோகச் செயலுக்காக என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

அந்த ஓலையைப் படித்து முடித்தானதும், ஆத்திரத்தோடு தூமகேதுவை ஏறிட்டுப்பார்த்தான், சோலையப்பன்.

"பொன்னையாவின் நண்பன் நான் என்றும் இராஜத் துரோகச் செயலில் ஈடுபட்டது உண்மை என்றும் எழுத்து மூலம் நான் ஒத்துக்கொள்ளவேண்டும்- அல்லவா?" என்று கோபத்தோடு சிறைக்கம்பிகளை அடித்துக் கேட்டான் சோலையப்பன்.

"டிங்! டிங்!' என்ற சப்தத்தை ஊடுருவிக்கொண்டு, சோலையப்பா, கையெழுத்திடு—நாளையே உன்னை விடுவித்துவிடுகிறேன்!" என்ற தூமகேதுவின் குரல் ஒலித்தது.

"பொய்யை உண்மை என்று ஒத்துக்கொள்ளச் சொல்கிறீர்! முடியாது!"

"கையெழுத்திடு, சோலையப்பா!

"முடியாது முடியாது! முடியவே முடியாது!' என்று டிங் டிங் சப்தத்தை அமுத்திக்கொண்டு சோலையப்பனின் குரல் எழுந்தது.

தூமகேது கலகலவென்று சிரித்துவிட்டு, மேல் துணியால் முகத்தைத்

துடைத்துக்கொண்டு கன்னங்களைத் தடவியபடி சோலையப்பனின் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

"உன் மனத்தில் எழுந்தது நியாயமான சந்தேகந்தான், சோலையப்பா! தன் தவறைத்தானே ஒத்துக்கொண்டதாக கையெழுத்திடுவது-தூக்குக் கயிற்றை எடுத்துத் தானே கழுத்தில் மாட்டிக்கொண்டதைப்போலாகுமே என்று சந்தேகமும் பயமும் கொள்கிருய்! நியாயமான சந்தேகம்! முன்பு சொன்னேனே கண்ணப்பன், மன்மதன் செயல்களைப்பற்றி அதை இப்பொழுது நினைவுபடுத்துகிறேன்! இந்த ஓலை, பயங்கரமானதுதான் — ஆபத்தானதுதான் — இல்லை என்று நான் சொல்லவில்லை! இதைப் படித்ததும் எழுகிறதே ஒரு எண்ணம் அது பொய்! இந்த ஓலையைப் பயன்படுத்தி உனக்குத் தீங்கு செய்துவிடுவேன் என்று சந்தேகங்கொள்கிருய்! கொஞ்சம் யோசித்துப்பார், இந்த ஓலையில்லாமலேயே உனக்கு நான் கேடு செய்யக் கூடாதா? செய்யத்தான் முடியாதா? ஏன் இதில்கையெழுத்திடச் சொல்கிறேன் — ஆத்திரத்தையும் வெறுப்பையும் தூரமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஒரு முறை இப்படிக் கையெழுத்திட்டுவிட்டால், மறுமுறை அந்தச் சதிக் கூட்டத்தில் நீ சேரமாட்டாய்! அப்படிச் சேரவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டால், இந்த ஓலையின் நினைவு வந்து அந்த எண்ணத்தையே அடியோடு அழித்துவிடும்! அதனுல் நீ சீர்படுவாய்! சிறந்த தொண்டை நாட்டிற்கு நல்குவாய்! உன் தந்தையைப் போல நீயும் பேரோடும் புகழோடும் வாழ்வாய்! அந்த ஒரே ஒரு ஆசையினுல்தான், இப்படி ஒரு ஓலை நான் தயாரித்திருக்கிறேன்! புகழ்மிக்க உன் குடும்பத்திற்கு உன்னுல் மாசு உண்டாகக்கூடாது சோலையப்பா, மாசு உண்டாகக் கூடாது!"

டிங்! டிங்! டிங்!

நயவஞ்சக நரியே, சோலையப்பன் முட்டாள் அல்ல—அவ்வளவு சுலபத்தில் ஏமாற்றிவிட!"

டிங்! டிங்!

"சோலையப்பா! உன் தந்தையின் மீது கொண்ட மதிப்பாலும் அன்பாலும் கேட்கிறேன! உம்! கையெழுத்திடு!"

"கையெழுத்தா? இதிலா? என்று மிதமிஞ்சிய ஆத்திரமும் வெறுப்பும் கலந்த குரலில் சொல்லிக்கொண்டே அந்த ஓலையைக்கிழித்து தூமகேதுவின் முகத்தில் விட்டெறிந்துவிட்டு அறையிலிருந்த ஓர் ஆசனத்தில் போய் உட்கார்ந்து விட்டான்.

"சோலையப்பா! நீ ஆத்திரம் கொண்டாலும், நான் ஆத்திரமோ அருவருப்போ அடையவில்லை என்பதைத் தெரிந்துகொள்! உனக்கு நல்ல புத்தி வரவேண்டும்—அதுதான் என் ஆசை! அதற்காக நீ எவ்வளவு கேவலமாக நடத்தினுலும், நான் சகித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்! இரண்டு நாட்கள் கழித்து வருகிறேன்—அதற்குள் நான் சொல்லியவற்றை எல்லாம், ஒரு முறைக்குப் பல முறை நன்ருக யோசித்துப்பார்!" என்று மகனைப் பார்த்துத் தந்தை நல்லவார்த்தை சொல்வதைப் போலச் சொல்லிவிட்டு, தூமகேது அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான்.



சிறையினின்றும் வெளியேவந்த போது, மாலை நேரத்தின் குளிர்த் தென்றல் தூமகேதுவின்மீது பட்டது.

சிறிது நேரம் எங்கேயாகிலும் ஏகாந்தமாக உட்கார்ந்திருந்துவிட்டு வரலாம் என்ற எண்ணத்தோடு எதிரிலிருந்த பூஞ்சோலையினுள் நுழைந்தான்

'இந்த மாலை நேரத்தை அஞ்சலையோடு இந்த நந்தவனத்தில் கழித்தால்......ஆகா, பேரானந்தமாக அல்லவோ இருக்கும்!' என்று தனக்குத்தானே முணுமுணுத்தபடி நடந்தவனின் பக்கத்தில், ஏதோ 'தொப்'பென்று வந்து விழுந்தது.

அதைப் பொருட்படுத்தாமல் அஞ்சலை நினைவு தந்த போதையிலேயே மிதந்து சென்றவனின் முதுகில் ஒரு கல் வேகமாக வந்து படவே, திகைப்போடும் கோபத்தோடும் திரும்பினுன.

ரோஜாப் புதருக்கருகே, தோழி சிதாரி கன்னத்தில் கை வைத்தபடி முகத்தை வேறு பக்கம் திருப்பியிருக்க, இன்னெரு கல்லை ஓங்கியபடி நிற்கும் செந்தாமரையைக் கண்டதும் தூமகேதுவின் திகைப்பு இன்னும் அதிகமாகிவிட்டது!

[வளரும்]

2-ம் பக்கத் தொடர்ச்சி

தாகவும், அதன் விளைவாகவே, அது பலாத்கார நடவடிக்கைகளிலே ஈடுபடத் தொடங்கிவிட்டதாகவும் எடுத்து விளக்கினர். நாம் சந்திக்க வேண்டிய தொல்லைகளும், துயரங்களும் கடக்கவேண்டிய தொலைவும், தாண்டவேண்டிய பணமலையும் ஏராளம்! இருக்கின்ற குறைந்த இடைவெளியில் நாம் மிகத் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் எடுத்துக் காட்டினர்.

**மேயர் மோசஸ்** பேசுகையில், தான் பிறந்த மதுரை மாவட்டத்தின் அத்துணைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்திக்கச் செய்ய எல்லா ஆயத்தங்களும் தொடங்கியாகி விட்டது என்று கூறி, காங்கிரசை முறியடிக்கத் தேவையான காரணங்களை விளக்கினர்.

சூயஸ் கால்வாய் பற்றிய வரலாறு படித்தவர்கள், குழி தோண்டுவது பற்றிப் பேசமாட்டார்கள் என்றும், அக்கால்வாயை வெட்டியவர்களில் 12 ஆயிரத்திற்கும் அதிகமானவர் அக்குழியிலேயே வீழ்ந்து இறந்துபோயினர் எனவும், குழி வெட்டுவது என்பதன் தத்துவமே அக்குழி, மனிதனை வரவேற்கிறது என்பதுதான் என்றும், வெட்டப்பட்ட படுகுழி 1967ல் காங்கிரசைத்தான் எதிர்பார்க்கிறது என்றும் நகைச்சுவை ததும்ப எடுத்துக் காட்டினர் **சி. பி. சிற்றரசு.**

பாராளு மன்ற உறுப்பினர் **செ. கந்தப்பன்** பேசுகையில், காங்கிரசாரின் 4-ம் திட்டத்தில் 126 திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் ஒன்றுகூட மத்திய, மாநில எந்த மட்டத்திலும், தமிழகத்திற்கு இல்லை என்பதையும் எடுத்துக் காட்டி விளக்கினர்.

ஊர்வலத்திலும், பந்தலுக்குள்ளும் காணப்பட்ட மக்களின் பொங்கும் உணர்ச்சியும் பூரித்த உத்வேகமும் 1967 தேர்தலிலே காட்டினல், காங்கிரஸ் தோற்கடிக்கப்படுவது உறுதி என்றார் **எஸ். எஸ். ராஜேந்திரன்.**

**மதியழகன்** பேசுகையில், தற்போது நாட்டிலிருப்பது க்ஷேம நல அரசு அல்ல; அது ஆட்கொள்ளி அரசு என்று கூறி அதற்கான காரணங்களை விளக்கிவிட்டு, 67 தேர்தலில் மிகப் பெரும்பான்மையான இடங்கள் கழகத்துக்குக் கிடைக்கப் போவது உறுதி என்றார்.

பேராசிரியர் **அன்பழகன்** பேசும்போது காங்கிரஸ் ஆட்சியால் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியாது என்று கூறி அதற்கான காரணங்களையும், நிலைமைகளையும் விளக்கிவிட்டு உண்மையான சோஷலிச அரசு அமைக்க கழகத்தால் மட்டுமே முடியும் என்றும், அதற்கான காரணங்களையும் நிலைமைகளையும் விரிவாக விளக்கிப் பேசினர்.

**சிட்டிபாபு** பேசுகையில், காமராசர் சுற்றுப் பயணம் செய்துவிட்டு வந்துள்ள பெரும்பான்மையான ஊர்களில் தானும் பயணம் செய்திருப்பதாகவும், அந்நாடுகள் பற்றி அவர் கூறுவதில் பல முரண்பாடுகளைக் காண்கிறேன் என்றும் விளக்கினர்.



மாநாட்டுத் திறப்பாளர்

**அண்ணா** அவர்கள் பேசுகையில், இருப்பது இன்னும் நான்கு மாதங்கள்; அதற்குள் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? மீண்டும் இந்தக் காங்கிரசு ஆட்சி 1967-ல் ஏற்படக்கூடாது என்றல், அதற்கு இப்போதிருந்தே பணியாற்றவேண்டும்!

"நீங்கள் ஓவியராக இருந்தால்—காங்கிரசு எதிர்ப்பு உணர்ச்சியை ஓவியமாக வரைந்து காட்டுங்கள்! நீங்கள் பாடகராக இருந்தால்—காங்கிரசு எதிர்ப்புப் பாடல்களைப் பாடுங்கள்! நீங்கள் கட்டுரை எழுதுபவர்களாக இருந்தால்—காங்கிரசு ஆட்சியிலே ஏற்பட்ட கேடுபாடுகளைப்பற்றி ஏடுகளிலே எழுதுங்கள்! பேச்சாளர்களாக இருந்தால்—காங்கிரசு ஆட்சியின் சீர்கெட்ட தன்மையை நாடறியச் செய்யுங்கள்! பணியாற்றுகிறவர்களாக இருந்தால்—பத்துப்பேரைச் சந்திக்கிறபோதெல்லாம், இங்கே நண்பர்கள் எடுத்துச் சொன்னர்களே-அந்தக் கருத்துக்களை எடுத்து விளக்குங்கள்!

இந்த முறையில்—எப்படி கேரளத்தில் நடக்கும் ஐயப்பன் திருவிழாவுக்குப் போகிறவர்கள் 30-நாளோ, 40-நாளோ கருப்புச் சட்டை அணிந்து தாடியை வளரவிட்டு 'ஐயப்பா! ஐயப்பா!' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ—அதைப்போல் நீங்கள், 'அறுபத்தேழு! அறுபத்தேழு' என்றே பேசுங்கள்!

இந்த நான்குமாத காலத்துக்கு உங்களுக்கு வேறெந்த நினைவும் இருக்கக் கூடாது! வீட்டிலே துணைவியரிடம் சொல்லிவைக்க வேண்டும்—'67 தேர்தல் வரை, நம்முடைய பேச்சு மூச்செல்லாம் இதுதான்' என்று. 'உனக்குத் தெரிந்த தோழிகளிடம் நீ சொல்லு; எனக்குத் தெரிந்த தோழர்களுக்கு நான் சொல்கிறேன்' என்று பேசிக்கொண்டு, குடும்பம் குடும்பமாகப் பணியாற்றவேண்டும்!

இதுதவிர, இந்த 4-மாதத்திற்கு நாம், வேறு எந்தப் பேச்சும் பேசக் கூடாது! நாம் திறமையாக இணைந்து பணியாற்றினல், அவர்கள் எத்தனைக்கோடிப் பணத்தைத் திரட்டினலும் நிச்சயம் தேர்தலில் வெல்லலாம்!

இப்பொழுதே நீங்கள் நன்றாகத்தான் பணியாற்றுகிறீர்கள்; அதற்காக நான் பெருமைப்படுகிறேன்; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனலும், வருகிற 4-திங்களும் நீங்கள் அயராமல் முழுத் திறமையுடன் பணியாற்றவேண்டும்; கழகத்தை ஆட்சியில் அமர்த்துகிற காரியத்துக்குத் துணை இருக்கவேண்டும்! இப்படி ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடித்துவிட்டு, எதனையும் களியுங்கள்.

ஆனல் அதுவரைக்கும், இன்றிலிருந்தே முழுமூச்சோடு நீங்களெல்லாம் சர்வாதிகாரத்தை வீழ்த்தவும் நீதிநெறியை நிலைநாட்டவும், சனநாயகத்தைக் காப்பாற்றவும், அநீதி அக்கிரமங்கள் தொலையவும் பாடுபடுவீர்களானல்—அந்த ஒரே பிரச்சினையில் உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்களானல்—திறமையாகச் செயல்படுவீர்களானல்—நல்ல சாதகமான சூழ்நிலை அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை" என்றார்கள்.

இருநாட்களிலும் எஸ்.எஸ்.ஆர். குழுவினரது மணிமகுடம், தென்பாண்டி வீரன் நாடகங்களும் நடைபெற்றன. ○